(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1978-ம் ஆண்டு, மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(8) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(9) 1978–79-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 17—கல்வி—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் வைத்திருந்த அறிக்கையில் சில பிழைகள் இருக்கின்றன. அதையும் சொல்லி விடுகிறேன். மானியக் கோரிக்கை தமிழ் பதிப்பில் பக்கம் 51ல் உடற்பயிற்சிக் கல்லூரி மாணவர் எண்ணிக்கை 700 என்று இருப்பது 340 என்று இருக்க வேண்டும். பக்கம் 102-ல் 1976-77,